DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 19/2024**

**Deposition of LW1 examined as PW1** (Complainant) Dt. 09.02.2026

| | |
|---|---|
| Name | சஞ்சய்குமார் மீனா |
| Father's/Husband's Name | லெட்சுமணன் லால் மீனா |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 09.02.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து மயிலாடுதுறை ரயில்வே ஸ்டேசனில் ஸ்டேசன் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் நான் வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் என்னிடம் தகறாறு செய்தார். அந்த சமயம் ரயில் நிலையத்தில் ஆட்கள் நிறைய வந்து சென்று கொண்டிருந்தார்கள். வழக்கு எதிரி ராஜசேகரன் என்பவர்தான் என்னிடம் தகராறு செய்த செய்ததாக நினைத்து போலீசாரிடம் புகார் மனு கொடுத்து விட்டேன். சம்பவ சமயத்தில் எதிரி ராஜசேகரன் சம்பவ இடத்தில் இல்லை. தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

எதிரியை எனக்கு தெரியும். அவரும் என்னுடன் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் பாயிண்ட்ஸ் மேனாக பணிபுரிந்து வந்தார். கடந்த 08.10.2023 ம் தேதி காலை 5.00 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் நான் ஸ்டேஷன் மாஸ்டராக பணியில் இருந்த போது எதிரி ராஜசேகரன் என்னிடம் லீவு தருமாறு கேட்டதாகவும், அதற்கு நான் ஸ்டேஷன் டிரான்ஸ்போர்ட் இன்ஸ்பெக்டரிடம் பேசிவிட்டு ஆறு மணிக்கு மேல் பதில் சொல்வதாக கூறியதாகவும், அப்போது எதிரி ராஜசேகரன் ஆத்திரமடைந்து டார்ச் லைட்டால் எனது இடது முழங்கை மற்றும் உதட்டிலும்

(Sanjay Kumar Meena) 09/02/2026

9/2/26

அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் ஸ்டேஷன் ஸ்டோர் ரூமில் இருந்த அருவாளை எடுத்து வந்து என்னை தாக்க முற்பட்டதாகவும், போலீசாரிடம் புகார் மனு கொடுத்துவிட்டு தற்போது எதிரி ஒரே துறையில் வேலை பார்த்து வருவதாலும், எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

9/4/26
நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை

SANJAY KUMAR MEENA
CSP
09/04/2026